<u>**SWORN STATEMENT**</u>

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

Name : Velayudhakumar

Father/Husband's Name : Chellaiah

Age :

Address :

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 19th day of February, 2025.

---

<u>**Crl.M.P No. 23071/ 2024**</u> : -

19.09.2022 அன்று எனது மகள் ஜலினா பாலா மருந்து வாங்க கடைக்கு செல்வதாக கூறி சென்றவர் பின்னிட்டு காணவில்லை. நான் வெளியூர் சென்றிருந்ததால் எனது மனைவி எனக்கு தகவல் கொடுத்தார். அதன் பின் மறுநாள் 20/09/2022 அன்று நான் சேத்துப்பட்டு சி–7 காவல் நிலையம் சென்றேன். அங்கு உதவி ஆய்வாளர் சுப்ரமணி என்பவரிடம் எனது மகளை காணவில்லை புகார் சொன்னேன். அப்பொழுது சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் வெற்றிசெல்வன் என்பரிடம் கூட்டி சென்றார். அவர் எனது மகளின் விவரத்தை கேட்டார். கேட்கும் போது அவர் என்ன ஜாதி என்பதையும் கேட்டார். நான் தேவேந்திர குல வேளாளர் பள்ளர் என்று சொன்னேன். அப்போது எழுத்தர் ரமேஷ் என்பவர் இங்கு பள்ளர் என்பது கிடையாது, பறையர் தான் உண்டு, உன் ஜாதி என்ன என்று கேட்டார்.

ஆய்வாளர் வெற்றிசெல்வன் தென்னகத்தில் பள்ளர் என்ற ஜாதி உண்டு. எங்கள் பகுதியில் எங்கள் ஜாதிக்கும் ( சாட்சி அவர் தேவர் ஜாதி என்று கூறுகிறார்.) அவர்கள் ஜாதிக்கும் அடிக்கடி தகறாறு வரும் என்று கூறினார். எங்கள் ஜாதி இருக்கும் இடத்தில் செருப்பு அணியாமலும், தோளில் துண்டு அணியாமலும் வருவது வழக்கம். உதவி ஆய்வாளர் சுப்பிரமணி என்பவர் சேலம், கோயம்புத்தூர் பகுதிகளில் உங்கள் ஜாதி என்ன பெயர் என்று கேட்டார். நான் பண்ணாடை என்று சொன்னேன். 12/10/2022 சுமார் 08.30 மணியளவில் என் மகளை கூட்டி சென்ற கனிஷ்கன் என்பவன் உன் மகள் என்னுடன் வராவிட்டால் 25 ரவுடிகளை வைத்து உன் வீட்டில் இருந்து தூக்கி செல்வேன். பாண்டிச்சேரியிலும், சென்னை மாகாணத்திலும் கொலை செய்தவர்கள், கொள்ளை அடிப்பவர்கள் எல்லோரும் எனக்கு பழக்கம், எல்லோரும் என்னை தம்பி என்று அழைப்பார்கள். நான் என்ன சொன்னாலும் செய்வார்கள். உன் வீட்டில் இருந்து யார் யார் எங்கு செல்கீறிர்கள் என்று நான் ஆள் வைத்து கண்காணித்து வருகிறேன். கனிஷ்கன் பேசிய ஆடியோவை 12/10/2022 அன்று இரவே உதவி ஆய்வாளர் சுப்பிரமணிக்கு அனுப்பி வைத்தேன். 17/10/2022, 24/11/2022 அன்று துணை ஆணையர் கோபி அவர்களுக்கும் அனுப்பிவைத்தேன். 14/10/2022 அன்று இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க என் மனைவி

சத்தியபாமா உடன் சென்றேன். அப்போது புகாரையும், ஆடியோவையும் எழுத்தர் ரமேஷ் என்பவரிடம் கொடுத்தேன். இதற்கு மனு ரசீதோ, முதல் தகவல் அறிக்கையோ எதும் தரவில்லை. 03/11/2022 ஆய்வாளர் வெற்றி செல்வன் என்பவரிடம் என் மனைவி கொடுத்த புகார் என்னவானது என்று கேட்டேன். டேய் வேசி மகனே, நீ என்ன ஜாதிடா என்று கேட்டார். தேவேந்திர குல வேளாளர் இந்து பள்ளன் என்று சொன்னேன். உன் மனைவி கொடுத்த புகாருக்கு எல்லாம் நடவடிக்கை எடுக்க முடியாது, உன்னால் ஆனதை பார், வெளியே போ, இல்லையென்றால் பொய் வழக்கு போட்டு உள்ளே தள்ளவிடுவேன் என்று கூறினார். அப்பொழுது எழுத்தர் ரமேஷ் இந்த புகார் நடவடிக்கை எடுக்க விடமாட்டேன். கனிஷ்கன் என்பவன் என் ஜாதியை சார்ந்தவன். உதவி ஆய்வாளர் சுப்ரமணி எனது ஜாதியை சார்ந்தவன். 12/11/2022 கீழ்ப்பாகம் துணை ஆணையாளர் கோபி அவர்களிடம் என் மனைவி புகார் பற்றி ஆய்வாளர் வெற்றி செல்வன் புகார் மீது நடவடிக்கை எடுக்க மறுக்கிறார். கனிஷ்கன் அவருடைய ஜாதியை சார்ந்தவர்கள், உதவி ஆய்வாளர் சுப்பிரமணி, எழுத்தர் ரமேஷ் சேர்ந்து கொண்டு நடவடிக்கை எடுக்க மறுக்கிறார்கள். என் வீட்டிற்கு அடிக்கடி அடையாளம் தெரியாது நபர்கள் வந்து செல்கிறார்கள். எங்கள் குடும்பத்திற்கு பாதுகாப்பு இல்லை. மேலும் என்னை பற்றியும், என் ஜாதியை பற்றியும் ஆய்வாளர், உதவி ஆய்வாளர் மற்றும் ரமேஷ்

ஆகியோரகள் இழிவாக பேசுகிறார்கள் என்று கூறினேன். துணை ஆணையர் கோபி ஆய்வாளர் வெற்றி செல்வனை அழைத்தார். அவர் உள்ளே வரும் போது துணை ஆணையர் கோபியை பார்த்து பட்டியலின தாழ்த்தப்பட்ட பள்ளர் வகுப்பை சார்ந்தவனை எப்படி உட்கார வைத்து பேசுகிறீர்கள் என்று ஆவேசமாக பேசினார். உடனே துணை ஆணையாளர் கோபி அவர்கள் ஆய்வாளர் வெற்றி செல்வனை வெளியே போ என்று துரத்தி அனுப்பினார். அதன் பின்பு 13/11/2022 அன்று காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு எழுத்தர் ரமேஷ் எங்கள் புகார் மீது என்ன நடவடிக்கை என்று கேட்க வந்தீர்கிறோம் ஆய்வாளர் இருக்கிறாரா என்று கேட்டதற்கு அவர் உடனே ஆய்வாளர் வெற்றி செல்வனை தொடர்பு கொண்டு கேட்கும்போது சேத்துப்பட்ட ஹாரிங்டன் ரோடு அங்கு இருக்கிறேன். வர சொல் என்று கூறினார். எழுத்தர் ரமேஷ் என்பவரிடம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு எதற்கு ஹாரிங்டன் சிக்னல் போக வேண்டும் என்று கேட்டேன். உங்கள் தகுதிக்கும் ஜாதிக்கும் எங்கு காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரிக்க வேண்டும் என்று சட்டம் கிடையாது. அதன்பின்பு சேத்துப்பட்டு ஹாரிங்டன் ரோடு சிக்னல் ஆய்வாளர் வெற்றி செல்வனும், உதவி ஆய்வாளர் சுப்ரமணியும் நின்றிருந்தார்கள். ஆய்வாளர் வெற்றி செல்வன் வாகனத்தில் இருந்தார். உதவி ஆய்வாளர் வாகனத்தின் அருகே கீழே நின்று கொண்டிருந்தார்.

அப்போது ஆய்வாளர் வெற்றி செல்வன் அவர்கள், ஏய் புறம்போக்கு நாய்களா நீ சி.எம் கிட்ட போனாலும் சரி, கமிஷர்கிட்ட பெட்டிசன் கொடுத்தாலும் சரி, உங்கள் பெட்டிசன் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. திரும்பவும் கேட்கிறேன் என்ன ஜாதிடா என்று கேட்டார். தேவேந்திர குல வேளாளார் பள்ளர் என்று சொன்னேன். அப்போது நீ பள்ளனா, பறையனா, சக்கிலியனா எந்த வகையை சார்ந்தவன்டா நீ, பட்டியலின பள்ளர் புகார்களுக்கெல்லாம் இங்கு நடவடிக்கை எடுக்கு முடியாது. உதவி ஆய்வாளர் சுப்பிரமணி என்பவர் சிரட்டையில் ( கொட்டாங்குச்சியில் ) காப்பி குடித்த நாய்கள் எல்லாம் பட்டியலின பள்ளராக இருக்கிற காரணத்தினால் எங்களுக்கு சமமாக கிளாஸ்ஸில் டீ குடிக்கிற காரணத்தினால சரிசமமாக இருக்கிற திமிரில் நடவடிக்கை எடுக்க சொல்லி கேட்கிறியா, அதன் பின்பு ஆய்வாளர் வெற்றி செல்வன் உங்கள் புகார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் ரூ.50,000/- லஞ்சம் கொடு, உங்கள் ஜாதியினர் மீது மற்ற ஜாதிக்காரர்கள் புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பேன். பட்டியலின ஜாதிக்காரர்கள் அடுத்த ஜாதி மீது புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க மாட்டோம். பிறர் ஜாதியினர் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுத்து பட்டியலனத்தவரை உள்ளே தள்ளுவதும், தண்டனை வாங்கி தருவதும் தான் எங்களுடைய வேலை, நடவடிக்கை எடுக்க முடியாது என்று ஆய்வாளர் வெற்றி செல்வனும்,

உதவி ஆய்வாளர் சுப்பிரமணியும் அடித்து விரட்டினார். அந்த பகுதியில் இருந்த பொது மக்கள் எங்களை மிகவும் அவமானமாக பார்த்தார்கள். அதில் ஒரு சிலர் இந்த காலகட்டத்தில் இப்படி ஜாதி வன்மம் பிடித்த ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும் இருக்கின்றார்களா என்று பேசினார்கள். 17/10/2022 அன்று எனது மகளை கோயம்புத்தூர் மேட்டுப்பாளையத்தில் நான் உடன் சென்று அழைத்து வந்தேன். அப்போது கோயம்புத்தூர் மேட்டுப்பாளையத்தில் என் மகள் மீட்கப்பட்ட போது காவலர் முனுசாமியும், காவலர் ராஜ்குமாரும் என்னுடன் பெண் போலீஸ் அனுப்புகிறீர்களா சட்டப்படி பெண் போலீஸ் அனுப்ப வேண்டும். நாங்கள் மூவர் ஆண்கள் இருக்கிறோம். பெண் போலீஸ் தேவையில்லை, பட்டியல் இனத்தவர்களுக்கு சட்டப்படி நடத்த வேண்டாம் என்று வெற்றி செல்வன் அறிவுறுத்தினார். 17/10/2022 எனது மகளையும் என் மகளை கூட்டி சென்ற கனிஷ்கனையும் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு விசாரணைக்கு சென்றோம். கீழ் தளத்தில் எழுத்தர் ரமேஷ் உடன் சேர்ந்து சில காவலர்கள் விசாரணை நடத்தினார்கள். மேலே ஆய்வாளர் வெற்றி செல்வன் அறைக்கு வர சொன்னார்கள். அப்போது ஆய்வாளர் அறைக்கு வெளியே கனிஷ்கன் தாயர் மலர்வாணி மற்றும் அவரது உறவினர்கள் வந்திருந்தார்கள். பொதுமக்கள் புகார் கொடுக்கவும் வந்திருந்தார்கள். அப்போது நானும் எனது மனைவியும் உள்ளே சென்ற போது ஆய்வாளர்

வெற்றி செல்வன் நாங்கள் உட்கார்ந்திருந்தோம், ஏன் உள்ளே உட்கார்கிறீர்கள் உட்கார கூடாது, பட்டியலினத்தவர்கள் எல்லாம் உட்கார கூடாது, எழுத்தர் ரமேஷ் உயர் ஜாதியில் உள்ளவர்களுக்கு மட்டும் தான் மரியாதை, பட்டியல் இனத்தவர்களுக்கு மரியாதை கிடையாது. ஆகையால் எழுந்து நில்லுங்கள் என்று கூறிவிட்டு நானும் எனது மனைவியும் எழுந்து நின்றோம். கனிஷ்கனின் தாயார் மலர்வாணியை மேடம் உள்ளே வந்து உட்காருங்கள், உங்கள் உறவினர்களையும் உட்கார வையுங்கள், ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு அப்படிதான் நடப்பேன். எங்கள் ஊரில் உங்கள் ஜாதிக்காரரர்கள், செருப்பும் போட மாட்டார்கள், தோளில் துண்டும் அணிய மாட்டார்கள். அந்த இடத்தில் இருந்து வந்தவன் நான் என்று கூறி இறுதி வரை எங்களை நிக்க வைத்தார்கள். அதன் பிறகு மாலையில் விசாரணை என்று கூறிவிட்டு எனது மகளை YWCA ோஹாமிற்கு அனுப்பிவிட்டார்கள். கனிஷ்கனின் தாயார் மலர்வாணி குழந்தைகள் படிக்கிற வயது, இந்து திருமண சட்டப்படியும், குழந்தைகள் திருமண சட்டப்படியும் இது செல்லாது என்று கூறினார். நானும் இந்து மத சட்டத்திற்கு எதிராகவும் கனிஷ்கனின் வயது 20 ஆக இருப்பதாலும், ( சரியான திருமண வயது 21 என்று சாட்சி சொல்கிறார் ) 2006 ம் வருடத்திய குழந்தைகள் திருமண தடுப்பு சட்டம் பிரிவு 9 ன் படி செல்லாது என்று கூறினேன். திருமணம் நடைபெற்றது கோயம்புத்தூர் அந்த மாவட்ட

ஆட்சித்தலைவர் 04/06/2021 அன்று 21 வயதிற்கு குறைவான ஆண் திருமணம் செய்தால் குழந்தை திருமணம் தான் என்று 2 வருட தண்டனையும், ஒரு லட்சம் ரூபாய் அபராதமும் இருக்கிறது என்று உத்தரவு போட்டிருந்தார். இதனை ஆய்வாளர் வெற்றி செல்வனிடம் காட்டிய போது பட்டியல் இனத்தவருக்கு இந்த சட்டம் செல்லுபடியாகாது, கனிஷ்கனின் ஜாதியை சார்ந்த உதவி ஆய்வாளர் சுப்பிரமணி, எழுத்தர் ரமேஷ் அவர்கள் வழிகாட்டுதல்படிதான் நடப்பேன், பெண்ணை பெற்றவர்களாகிய நாங்களும், கனிஷ்கனின் தாயாரான மலர்வாணியும் இந்த திருமணம் வேண்டாம் என்று முடிவெடுத்த நிலையில் கனிஷ்கனின் தந்தை கோபியை எழுத்தர் ரமேஷும், உதவி ஆய்வாளர் சுப்பிரமணியும் அங்கு வரவழைத்து சட்டப்படி நடக்காத திருமணத்தை வெற்றி செல்வன் ஏற்று கொண்டு எங்களிடம் எந்த தகவலும் கொடுக்கவில்லை, சம்மனும் அனுப்பவில்லை. YWCA ஹோமில் என் மகளை விடுமுறை நாளில் சட்டத்திற்கு அப்பாற்பட்டு ஆதார் அட்டையோ, செல் நம்பர், முகவரி ஏதும் வாங்காமல் பணத்தை லஞ்சமாக பெற்று கொண்டு வெற்றி செல்வனும், உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன், எழுத்தர் ரமேஷ் மூவரும் அனுப்பிவிட்டார்கள். நான் தாழ்த்தப்பட்ட ஜாதியை சார்ந்த பள்ளனாக பிறந்தது பாவமா, ஆதிக்க ஜாதிகளாகிய தேவர்களுக்கும், வன்னியர்களுக்கும் நாங்கள் அடிமைகளா, ஜாதி வன்மத்தின்

அடிப்படையிலும், வன் கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் மேற்சொன்ன மூவர்மீது நடவடிக்கை எடுத்து நீதி வழங்கும் படி கேட்டுக்கொள்கிறேன். இந்த புகாரை முதலமைச்சர் பிரிவு, மாநகர காவல் ஆணையாளர் மேலதிகாரிகளுக்கு அனுப்பிவிட்டேன். எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் நான் நீதிமன்றத்தை நாடி வந்துள்ளேன். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி சத்தியபாமா உள்ளார். அவரை எனது தரப்பில் விசாரிக்க உள்ளேன்.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

**Principal Judge**.